உ
சிவமயம்





# குமார காவியம்

வட்டுக்கோட்டையூர் பொறியியலாளர்

## அமரர் கதிரேசு குமாரசாமி

அவர்களின்

## நினைவு மலர்

22.01.2006

உ

# சமர்ப்பணம்





மாந்தருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இனியன சிந்தித்து இன்சொல் பேசி
அன்புடன் எமைப் பேணிக்காத்து
பண்புடனும், இன்முகத்துடனும்
பார்போற்றும் எந்திரியாக பணிசெய்து
நேசத்துடனும் இன்முகத்துடனும்
வாழ்வாங்கு வாழ்ந்து,
வாழ வகை சொல்லி
இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது
அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு
இம்மலர்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

உ
சிவமயம்

# குமார காவியம்



வட்டுக்கோட்டையூர் பொறியியலாளர்

## அமரர் கதிரேசு குமாரசாமி

அவர்களின்


நினைவு மலர்

22.01.2006

உ
சிவமயம்

அமரர்

# கதிரேசு குமாரசாமி



மலர்வு 24 ✦ 05 ✦ 1924

உதிர்வு 23 ✦ 12 ✦ 2005

## திதி நிருணயப்பா

மங்களம் சேர் பார்த்திப மார்கழி
அபரபக்க ஸப்தமி திதியில் – பார்போற்றும்
வட்டுவூர் கதிரேசு குமாரசாமி எந்திரி
மாணடிகள் சேர்ந்தான் மகிழ்ந்து.

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

பண்: வியாழக்குறிஞ்சி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

பண் : கொல்லி

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வில்மறந் தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலைந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

பண் : இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையினாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத்
தாங்கிக்கொள்ளே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன யோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செய் யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

ஆரார்வந் தாரமரர் குழாத்தி லணியுடையா திரைநாள்
நாராயண னொடுநான் முகனங்கி யிரவியு மிந்திரனும்
தேரார்வீதி யிற்றேவர் குழாங்க டிசையனைத்து நிறைந்து
பாரார்தொல் புகழ்பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
" பிறவாமை வேண்டும் ; மீண்டும்
பிறப்புண்டேல்; உன்னை என்றும்
மறவாமை வேண்டும் ; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீ ழிருக்க" என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் (கு) அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திணிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## சைவ சமயாச்சாரியர்கள் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம் .

**இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றி னின்ற துணை.**

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்**
**கைம்புலத்தா றோம்ப றலை.**

**இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்**
**முயல்வாரு ளெல்லாந் தலை.**

– *திருக்குறள்*

# திருநீற்றுப் பதிகம்

பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்திருநீறே.1.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2.

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவவினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3.

காணவினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணியணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. 4.

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே. 5.

அருத்தம தாவது நீறு அவலமறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. 6.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதருசூலத் தாலவாயான் திருநீறே. 7.

இராவணன் மேலது நீறு வெண்ணத்தகுவது நீறு
பராணவமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந் திருமேனி யாலவாயான் திருநீறே. 8.

மாலொடயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர் தடங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம் பிடர் தீர்க்கு மின்பந்தருவது நீறு
ஆலம துண்டமிடற்றெம் மாலவாயான் திருநீறே. 9.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங்கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்து மாலவாயான் திருநீறே. 10.

ஆற்றலடல் விடையேறு மாலவாயான் றிருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்



# கோளறு திருப்பதிகம்

**பண்:** பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1.

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றேடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அறநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3.

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5.

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6.

செப்பிள முலைநன் மங்கைஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமனைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10.

தேனமலர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும்திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே. 11.

உ
சிவமயம்



# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்றநிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்

சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்.
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்து ம் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் கா ட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியோர்க்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச்சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயாஅரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்



# திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிறை யறுபதம் முரன்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவ னவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉ ன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே.

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

*- திருக்குறள்*

உ
சிவமயம்



# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய் மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ், சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்க்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச்சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் திசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புஞ் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாயப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வடியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள்மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தணையாள் விண்ணோரை தான் பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15.

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்



# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1.

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர ஆளுமை யாள்கொழுநற் (கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே 3.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யாக்கும்மங்கை
பாங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக் (கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8.

வையகம் எல்லாம் உரலதாக
　　மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
　　மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
　　செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
　　ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
　　மெய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
　　செம்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
　　பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாடஆட
　　ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
　　வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
　　பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
　　சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
　　ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை மருந்தினை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கந்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கபொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே. 14.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15.

ஆவகை நாமும்வந் தனபாதம்போ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 17.

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்கருப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே. 20.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்



ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களப்பச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்

பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமுங்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனி தெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)

உ
சிவமயம்



உ

சிவமயம்

# விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. 1

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க 2

காமரூபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பர்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க. 4

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க 5

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க. 6

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க 7

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. 8

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். 9

(விநாயகர் கவசம் முற்றிற்று.)

உ
சிவமயம்



# காசிப முனிவர் அருளிய
# விநாயகர் அநுபூதி
## (மூலமும் – உரையும்)

### நாநலம் பெற

1. பூவார் புனிதா! புவனத்தலைமைத்
தேவா! கரியின் சிரமே உளவா!
மூவாத் தமிழால் முறையே உனைஎன்
நாவால் புகழும் நலமே அருள்வாய்.

பொழிப்பு :

*அழகு பொருந்தியவனே ! ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவன் ஆனவனே! யானையின் முகத்தைக் கொண்டவனே! நான் உன்னைப் பழமையான தமிழால் புகழ்ந்து பாடும் வலிமையை எனக்கு அருள்வாய்!*

### சொல் வன்மை பெற

2. வில்லாண் மையரும் விரிமா தமிழில்
வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்
நல்லாண் மையது நனியே மிளிரும்
சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!

பொழிப்பு :-


*துரியப் பொருள் ஆனவனே! தோள் வலிமை மிக்கவரும், தமிழில் புலமை மிக்கவர்களும் உன்னைப் புகழ்வார்கள். அவ்வாறே நானும் உன்னைப் பாட சொல்வன்மையை எனக்குக் கொடுப்பாயாக!*



அன்றைய மகாவலி அமைச்சர்
காமினி திசாநாயக்காவிடம் நீர்ப்பாசனத் திட்டத்தின்
நவீன முறைகளை எடுத்துக்கூறுகின்றார்



பொறியியலாளர் குமாரசுவாமி உரை
நிகழ்த்துகின்றார், அன்றைய அமைச்சர் றோனி டி மெல்
அருகில் அமர்ந்திருக்கின்றார்



1942 இல் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி
மாணவனாக இருந்த காலை சகமாணவர்களுடன்



1962 இல் பொரலண்டா திட்டத்தில்
பணியாற்றிய பொழுது

## கீழ்மைப் பண்புகள் அழிய

3. காமா திகளாம் கயமைப் பிணிகள்
போமா (று) அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்
கோமா! கருணைக் குகனார் தமையா!
பூமா ! பொலமார் புலவா! வருவாய்!

பொழிப்பு:-

*தலைவனே! முருகனின் சகோதரனே! பூவுலகுக்குத் தலைவனே! ஞான வடிவான புலவனே! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் கீழ்த்தரமான பண்புகள் என் உள்ளத்திலிருந்து போகும்படி அருளி, என் குற்றம் தவிர்த்து, என்னை ஆட்கொள்வாயாக.*

## முழு முதலை உணர

4. அந்தே வர்களும் அயன், மால், அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
கத்தா கரிமா முகத்தான் எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே !

பொழிப்பு:-

*தேவர்கள், திருமால், நான்முகன், சிவபெருமான், சைவ சித்தாந்திகள் வழிபடுவதற்கு உரிய முழுமுதற் கடவுள் விநாயகனே ஆவான் ! " என்று புகழப்படும் விநாயகனே !*

## குருவாய் வந்து அருளுவான்

5. காவா எனைஐங் கரனே ! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே !
நீவா விரைவாய் நிமலன் புதல்வா !
தாவா கருணைத் தளிர்சே வடியே !

பொழிப்பு:-

ஐந்து கைகளை உடையவனே ! என்னைக் காப்பாய். இனிமை யாகப் புலவர்களால் பாடப்படும் குருவே! தூய்மையான வடிவுடைய சிவபெருமானின் மைந்தனே ! நீ வருவாயாக. குற்றமில்லாத கருணையைப் பொழியும் தளிர்போன்ற செம்மையான அடிகளை உடையவனே !

## பேரின்பம் பெற

6. ஒருகொம் புடையான் ; உயர்மோ தகமே
விரும்பும் பெருமான் ; விடையோன் குமரன்;
சுரும்பார் தொடையன் ; சுகமா குமெலாம்
அருள்வான் ; அருள்வான் ; அடியார் அவர்க்கே !

பொழிப்பு:-

ஒற்றைக் கொம்பை உடையவன் ; மோதகத்தை விரும்பும் பெருமான் ; சிவபெருமானின் மைந்தன் ; வண்டுகள் மொய்க்கும் மாலையை உடையவன் ; அடியவர்களுக்கு இன்பங்களை அருள்வான்.

## விதியினால் வரும் வேதனை நீங்க

7. பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்
சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே
ஊழ்வே தனைதீர்த் (து) உளமே மகிழ
வாழ்வே தரும்வல் லபைநா தனரே!

பொழிப்புரை:-

சிறப்புப் பொருந்திய வாயினை உடைய விநாயகனின் மலர் போன்ற திருவடிகளே அணுகுபவர். பணிந்து வணங்குபவர். புகழ்ந்து பாடுபவர் ஆகியவர்களின் முன்வினைப் பயனைத் தீர்த்து, நல்ல வாழ்வைத் தருபவன் வல்லபையின் நாதனே ஆவான்.

## பேய் , பூதம் , பில்லி, சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல

8. பேய்பூ தமொடு பிலிசூ னியமும்,
பாய்வேங் கையதும் பரையின் அருமைச்
சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்
போய்மாய்ந் திடுமே புனிதம் வருமே !

பொழிப்பு:-

*பராசக்தியின் புதல்வனாகிய விநாயகனது திருப்பெயரைச் சொல்லுபவருக்குப் பேய், பூதம், பில்லி, சூனியம் போன்றவற்றாலும், வேங்கை முதலிய விலங்குகளாலும் விளையும் தீமைகள் போகும். தூய்மையும் வந்தடையும்.*

## நல்ல புலமை பெற

9. பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும், உயர்செல் வமதும்
நல்காய் நலமாய், நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்சித் திவிநா யகனே!

பொழிப்பு:-

*அழகான மலர் போன்ற அடிகளை உடைய செல்வனே' சித்தி விநாயகனே' நான் பலவகைக் காப்பியங்கள் இயற்றும் திறமையும், அழியாத புகழையும், சிறந்த செல்வத்தையும் பெற அருள்வாய் !*

## சிறியவனும் அருள் பெற

10. பூந்தார் சூழல் வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே !
தேர்ந்தே தொழுதேன் சிறியேற் (கு) அருளே!

பொழிப்பு:-

*மாலையை அணிந்த கூந்தலையும், வில் போன்ற புருவங்களையும், இளந்தளிர் போன்ற உடலினையும் பெற்றிருக்கும் சித்தி, புத்தி என்ற தேவிமார் இருவரையும் பெற்று எழுந்தருளியிருக்கும் ஒப்பில்லாத முதல்வனே! உன்னைத் தொழுதேன். சிறிவனாகிய எனக்கும் அருள் செய்வாயாக.*

## புலன்களை அடக்க

**11. வஞ்சப் புலன்என் வசமாய் நிசமாய்க்**
**கொஞ்சிக் குலவிக் குணமாய் மிளிர**
**எஞ்சித் தமதில் இனிதே உனது**
**கஞ்சக் கழல்வை கணநா யகனே!**

பொழிப்பு:-

*தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்னை வஞ்சித்துத் தீய வழியில் சேர்க்கும் ஐம்புலன்களும் என் அறிவுக்கு உட்பட்டு நல்ல செயல்களைச் செய்பவையாய் மாறி ஒளி விடுவதற்கு, என் சித்தத்தில் உனது தாமரை போன்ற அடிகளை வைப்பாய்!*

## வறுமை நீங்கிச் செல்வம் பெருக.

**12. பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்**
**எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே**
**வல்லாய் வருவாய்; வளமே தருவாய்;**
**உல்லா சமிளிர் ஒருகை முகனே!**

பொழிப்பு:-

*அழகான துதிக்கையை உடையவனே! பாவங்களைச் செய்யத்தூண்டும் வறுமையையும், கொடிய நோய்கள் எல்லாவற்றை யும் அழித்து என்னை ஆண்டுகொள்ள வல்லமை பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு வளங்களைத் தருவாய்.*

## இப்பிறவிப் பயன்பெற்று வீடுபேறு பெற

13. மகத்தாய் அணுவாய், மதியாய்க், கதிராய்
செகத்தாய் அறிவாய்த் திகழ்சாட் சியதாய்
அகத்தும், புறத்தும் அகலாப் பொருளாய்
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!

பொழிப்பு:-

*பெரியதாயும், அணுவாயும், சந்திரனாயும், சூரியனாயும், சகமாயும், அறிவாயும், நல்வினை தீவினைகளுக்குச் சாட்சியாயும், அகத்திலும் புறத்திலும் அகலாத பொருளாயும், இம்மைப் பயனாயும், மோட்ச மாயும் திகழும் விநாயகனே !*

## நிறைந்த அருளைப் பெற

14. கருணைக் கடபுலைங் கரனே ! கபிலர்க் (கு)
அருளே கொடுத்தாய் ; அபயம் அளித்தாய் !
தருவே அனையாய் ! தமியன் தனைஆள்
குருவே பொறுமை குணநா யகனே!

பொழிப்பு :-

*கருணைக் கடலாகத் திகழும் ஐந்து கரத்தானே! கபிலருக்கு அருளைக் கொடுத்து, அடைக்கலம் தந்தாய். கற்பகமரம் போன் றவனே! தனியனான என்னை ஆளும் குருவே! பொறுமை மிக்க குணங்களுக்கெல்லாம் தலைவனே !*

## அருட்பாடல்கள் இயற்ற

15. கற்பார் இதயக் கமலத் (து) உறையும்
அற்பார் ஒளியே! அழகுஆ னைமுகா!
பொற்பாய் உமது பொலந்தாள் மலர்க்கே
நற்பா கொடுத்தேன் நனிஏற் (று) அருளே !

பொழிப்பு:-

*கற்பவர்கள் உள்ளத் தாமரையில் ஒளியாக எழுந்தருளுபவனே! அழகிய ஆனை முகத்தவனே ! உன் பொன் போன்ற திருவடிகளுக்கு நல்ல பாமாலையை நான் கொடுத்தேன். இதை நீ ஏற்றுக்கொண்டு அருள் புரிவாயாக!*

## செய்த பிழைகள் எல்லாம் தீர

**16. ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்**
**சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர! யான்**
**சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை**
**ஏற்றே அருள்வாய் ! அருள்வாய் இனிதே.**

பொழிப்பு:-

*உன் கருணைத்திறம் அறியாத நான் உன் திருவடிகளில் செய்த பிழைகளைத் தீர்ப்பாய்! கோபம் தவிர்ப்பாய் ; பரம்பொருளானவனே! நான் இயற்றிய தமிழ் மாலையை உனது துதிக்கையில் ஏற்று அருளுவாய்!*

## எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக

17. எந்தப் பிறப்பை எடுத்தா லும்உனைச்
சொந்தத் தமிழால் துதிசெய் திடவே
கொந்தே அலர்தார்க் குழல்வல் லபையாள்!
சிந்தைக் (கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!

பொழிப்பு :-

*மணம் வீசும் மலர் மாலைகளை அணிந்த வல்லபையின் மனத்துக்கு உகந்தவனே! நான் எந்த வகையான பிறப்பினை எடுத்தாலும் உன்னை என்னுடைய தமிழ்மொழியால் போற்றி வழிபட எனக்கு அருள்செய்வாய்.*

## பழைய பாவங்கள் தீர

**18. சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!**
**முந்தை வினையை முழுதும் தொலைத் (து) ஆள்**
**எந்தாய் எளியேன் எனைநீ எழிலாய்**
**வந்துஆள்! உயர்ஓ வடிவப் பொருளே!**

பொழிப்பு:-

*என் தந்தையே! பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்குபவனே! சிந்தாமணி விளக்கும் மார்பை உடையவனே! முற்பிறப்பு வினைகளை முழுதும் தொலைத்து எளியவனாகிய எனக்கு முன் அழகாகத் தோன்றி வந்து ஆள்வாயாக!*

## வலிமை பெற

**19. பகையார் அவர்முப் புரமே பொடியா**
**நகைசெய் தபிரான் நலமாம் கனியை**
**வகையாய் அருள வலம்வந் தவனே**
**தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!**

பொழிப்பு:-

*முப்புரங்களையும் தன்னுடைய சிரிப்பினால் பொடிசெய்த சிவபெருமான், ஞானப்பழத்தினை உனக்கே கொடுக்கும்படி அவனையும் . உமையம்மையையும் வலம் வந்தவனே! சிறந்த பண்பை உடையவனே! எனக்கு வலிமையைத் தந்தருள்வாய்.*

## எல்லாச் செல்வங்களும் பெற

**20. சீரோங் கிடும்நல் திறமும் பெருகும் ;**
**ஏரோங் கிடும் ; இனிதாம் திடமே**
**பேரோங் கிடும்நல் பெரும்வே ழமுகன்**
**தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!**

பொழிப்பு:-

*யானை முக விநாயகனின் திருவடிகளைத் தொழுபவர்களுடைய புகழ் ஓங்கும் ; நன்மைகள் பெருகும் ; அழகு மிகும் வலிமை மிகுதி ஆகும் என்பது உறுதி.*

## குழந்தைப்பேறும் செல்வமும் பெற

**21. மகப்பே (று) அருள்வான் ; மகிழ்வாய் நிதியை**
**அகத்தே தருவான் ; அணியன் ; கரிமா**
**முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்**
**செகத்தீர் தொழுமின்! தொழுமின் ! தினமே!**

பொழிப்பு:-

*விநாயகன் குழந்தைப் பேற்றினை அருள்வான் ; இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சியுடன் செல்வத்தைத் தருவான் ; அவன் அருகிலேயே இருப்பான் ; விநாயகனின் திருவடியை முறையாக நாள்தோறும் தொழுவீர்களாக.*

## நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

22. பெருமைப் பரிதி, பிறை , இத் தரைசேய்,
அருமால், குருவே அரசர் குரவன்,
கருமை அரவு கள்இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!

பொழிப்பு:-

*சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களும், விநாயகருடைய திருப்பெயரை உச்சரித்தவர்களுக்கு எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.*

## மன அமைதி பெற

23. ஓடித் திரிவாய் உலகுஏ ழும்மிக
வாடித் திரிவாய் மனனே ! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!

பொழிப்பு:-

*என் மனமே! அமைதியைத் தேடி ஏழு உலகங்களிலும் திரிந்தாய். இது உனக்குப் பொருத்தமுடையது அன்று. ஒற்றைக் கொம்பை உடைய விநாயகனைக் கூடுவாய்! பாடிப் பணிவாய்!*

## பயமின்றி வாழ

24. ஏகாக் கரனை எழில்ஐங் கரனைப்
பூகாப் பாவனைப், பொறுமைக் குணனை,
மாகா ளியவள் மகனை, மனனே!
நீகா எனவே நிதமும் பணியே!

பொழிப்புரை:-

*மனமே ஓங்கார வடிவை உடையவனை, அழகிய ஐந்து கரங்களை உடையவனை, உலகைக் காப்பவனை, அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனை, சக்தி மகனாகிய விநாயகனை அடைந்து, "நீ காப்பாய் " ! என்று நாள்தோறும் பணிவாயாக!*

## நலங்கள் பல வந்துசேர

25. தேடிப் பணிவார் சிலபேர் ; சிறப்பாய்
ஆடிப் பணிவார் சிலபேர் ; அணியாய்ப்
பாடிப் பணிவார் சிலபேர் ; அவரை
நாடித் தருவான் நலம்ஐ முகனே!

பொழிப்பு:-

*விநாயகப் பெருமானைச் சிலர் தலங்கள் தோறும் தேடிச்சென்று பணிவார்கள் ; சிலபேர் அவனைப் பாடி, ஆடிப் பணிவார்கள்; சிலபேர் கூட்டம் கூட்டமாய் கூடிப் பாடிப் பணிவார்கள் . இவ்வாறு பக்தி செய்பவர்களைத் தேடிப் போய் விநாயகன் நலன்கள் பலவற்றைத் தருவான்.*

## பகை நீங்க

**26. துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்**
**பட்டே இரியப் படையை விடுவாய்!**
**சிட்டர் புகழும் திறமே! வளரும்**
**மட்டில் மதமார் மழலைக் களிறே!**

பொழிப்பு:-

*பொல்லாதவர்களும், முறையில்லாமல் வாதம் செய்பவர்களும் பொடிப் பொடியாகப் போகும்படி , தன் திருக்கரத்தில் உள்ள படைக்கலத்தை விடுபவனே! நல்லவர்கள் புகழும் உறுதிப் பொருளே! அளவில்லாமல் கருணையாகிய மதநீர் பொழியும் அழகிய விநாயகரே.*

## இதமான வாழ்வு பெற

27. விண்நீ; உடுநீ மிளிர்வா யுவும்நீ;
மண்நீ ; அனல்நீ ; புனல்நீ; மதிநீ;
கண்நீ ; மணிநீ ; கவினார் ஒளிநீ ;
எண்நீ ; எனைஆள் இதம்செய் பவனே!

பொழிப்பு:-

*வானும் நீ அதில் விளங்கும் விண்மீன்களும் நீ ; திகழும் காற்றும்நீ ; நிலம் நீ; நெருப்பு நீ ; தண்ணீர் நீ; சந்திரனும் நீ ;இவற்றைக் காணும் கண் நீ ; கண்ணினுள் மணி நீ ; அதில் ஒளிரும் ஒளி நீ ; எண்ணப்படுகின்ற பொருள் நீ ; என்னை ஆட்கொண்டு நன்மை செய்பவனே!*

## நல்ல வழியில் செல்ல

28. தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே
ஆய நெறியை அறியா திருந்தேன்
தூய நெறியின் தொடர்காட் டினைநீ
ஆயும் நெறியும் அறிவித் தனையே!

பொழிப்பு:-

*விதிவசத்தால் நாத்திகத்தில் உழன்றேன் ; உன் அருளைப்பெறும் சன்மார்க்க வழியை அறியாமல் காலம் கழித்தேன், தூய்மையான பக்தி வழியைக் காட்டினாய். நான் உய்யும் நல்ல வழியை அறிவித்தாய்.*

## பிறவித் துன்பம் நீங்க

29. தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய் கரைஏற் றிடும்ஐங் கரனே!

பொழிப்பு:-

*நான் தொடர்ந்து வரும் பிறவியாகிய துன்பக் கடலில் முழ்கி அழுந்திக் கிடப்பது முறையோ? செல்வனே! பிரமனும் போற்றும் மணியே! நன்மை புரிபவனே! என்னைக் கரை ஏற்றிடும் ஐந்து கரமுடையவனே!*

## அறியாமை அழிய

30. மாயை எனும்கார்த் திரையைத் தெரித்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன் ;
தாயை நிகர்த்த தனிமா முதல்வன் ;
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!

பொழிப்பு:-

*உயர்ந்தவனே! நீ மாயை என்னும் கரிய திரையைக் கிழித்து, என் மனத்தில் தோன்றும் அச்சமாகிய பேயை விரட்டக் கூடிய பெருமான். தாயைப் போன்ற ஒப்பற்ற முதல்வனே! காயையும் கனி ஆக்குவது போல் ; பக்குவம் இல்லாத என்னையும் பக்குவப் படுத்துபவனே!*

## நன்மைகள் பெற

31. **அயில்கை உளநம் அறுமா முகற்கே**
    **மயிலூர் திதனை மகிழ்ந்தே அளித்தான்;**
    **செயிர்தீர அடியார் சிறப்பாம் வகையில்**
    **ஒயிலாய் நலம்தந் (து) உயர்த்தும் அவனே.**

பொழிப்பு:-

*அடியார்கள் சிறப்படையும்படி நன்மைகளைச் செய்து, அவர்களை உயர்த்துபவன் விநாயப் பெருமானே ஆவான். அவன் வேலைத் தாங்கிய முருகனுக்கு மயிலை வாகனமாக மகிழ்ந்து அளித்தான்.*

## அர்ச்சித்து அருளைப் பெற

32. **கரிமா முகனின் கருணை அறியார்**
    **எரிவாய் நரகில் இடரே படுவார் ;**
    **விரிமா தவரும் விரும்பும் பெரியோன்**
    **அரிதா அருச்சித் (து) அவனைப் புகழே.**

பொழிப்பு:-

*யானை முகத்தவனின் கருணைத் திறத்தை அறியாதவர்கள் வெம்மையான நகரத்தில் துன்பப்படுவார்கள். தவத்தை விரும்பிச் செய்யும் தவசிகள் விரும்பும் விநாயகனை வழிபட்டு அவனைப் புகழுங்கள்.*

## எண்வகைச் சித்திகளைப் பெற

33. இருநான் (கு) அவதா னம்எண்சித் திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!

பொழிப்பு:-

*உமையம்மையின் மைந்தனான விநாயகன் எட்டு அவதானங் களையும். எட்டுச் சித்திகளையும் விரைவாக வந்து அருளுவான். அத்தகையவனை, மனமே! போற்றுவாயாக!*

## பிரணவப் பொருளை உணர

34. கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும், திகழா றெழுத்தும்,
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே ; உணர்வாய் மனனே!

பொழிப்பு:-

*இரு வினைகளையும் போக்கும் நமசிவாய என்னும் ஐந்தெழுத் தும், நம: குமராய என்னும் ஆறெழுத்தும், ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்தும், விநாயகருக்குரிய ஓம் என்னும் ஒரே எழுத்தில் அடக்கம் என்பதை. மனமே! உணர்வாயாக.*

## இறை எண்ணம் பெற

35. அளவைக் கடந்தான்; அகிலம் கடந்தான் ;
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான் ;
வளவாம் நிலைமேல் வசிப்பான் பெரியோன்
உளமே அறிந்துஇன் புறவே வருவாய்!

பொழிப்பு:-

*விநாயகன் பிரமாண அளவைகளுக்கு அப்பாற்பட்டவன் ; இவ்வுலகைக் கடந்து நின்றவன்; முப்பத்தாறு தத்துவங்களின் உச்சியில் நின்று கடந்து நிற்பவன். அத்தகையவன் என்மனமாகிய இருப்பிடத்தை அறிந்து நான் இன்புறும்படி வரவேண்டும்.*

## படித்தோர் துன்பம் நீங்க

**36. கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்**
**தித்தித் திடும்செந் தமிழ்மா லைசெயும்**
**வித்தர் களின்தீ வினையை விலக்கும்**
**அத்தித் தலையன் அருட்பார் வையதே!**

பொழிப்பு:-

*கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், இனிமையான செந்தமிழால் பாமாலை புனையும் கவிஞர்களின் தீவினைகளை எல்லாம் யானை முகத்தவன் அருட்பார்வை நீக்கிவிடும்.*

## நல்ல கவி பாட

37. ஆரா அமுதம் எனஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியே!
வாராய்! வளமே வளர்வா ரணனே!

பொழிப்பு:-

*வளமெல்லாம் அளிக்கும் யானை வடிவானவனே! முடிவில்லாத கலைகளால் நிறைந்த கடலே! தெவிட்டாத அமுதம் போன்று ஆசு கவிகளை உன் புகழுக்காக நான் பாடும் ஆற்றலை அருள்வாய்!*

## விநாயகனைக் கண்டு மகிழ

38. வேதா கமமே மிகவும் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற் (கு)
ஆதா ர!நின (து) அருட்காட் சிதர
வாதா எழில் 'ஓ' வடிவா னவனே!

பொழிப்பு:-

*வேதங்களும், ஆகமங்களும் புகழும் திருவடிகளை உடையவனே! தொண்டு செய்பவர்கட்கு ஆதாரமானவனே! அழகான ஓங்கார வடிவானவனே! உனது அருட்காட்சியை எனக்காக வந்து தருவாயாக!*

## விநாயகனின் அருளைப் பெற

39. உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே ; தொழுதேன் ; தொழுதேன்;
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனை ஆண் (டு) அருளே!

பொழிப்பு:-

*தேவர்களெல்லாம் புகழ்ந்து பேசும் உறுதிப் பொருளே! யானை வடிவானவனே! உன்னைத் தொழுதேன். உன்னையே நம்பும் என்னைக் கைவிட்டு விடாமல் உன் அழகிய பொற்கரத்தால் ஆண்டு கொண்டு அருளுவாய்!*

## குறை தீர

40. கவிஞன் புகலும் கவின்ஆர் தமிழ்உன்
செவிஏ றியும்நீ திருகல் சரியோ?
புவிதான் புகழும் புழைக்கைய! கரம்
குவிவேன் ; மகிழ்வேன் ; குறைதீர்த்தருளே!

பொழிப்பு:-

*கவிஞர்களால் புகழ்ந்து பேசப்படும் அழகிய தமிழ்ப்பாக்கள் உன் செவிகளில் விழுந்தும் நீ அருளாமல் இருப்பது சரியாகுமா? உலகத் தார் புகழும் தும்பிக்கையை உடையவனே' என் இரண்டு கைகளை யும் குவித்தேன் ; அதனால் மகிழ்ந்தேன் ; என் குறைகளைத் தீர்த்தருளு வாயாக!*

## அருள் மழையில் நனைய

**41. மங்கை வலபை மணவா எள்அருள்**
**பொங்கும் புனலபோல் பொழிந்தே புவனம்**
**எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகண்!**
**தூங்கக் குணத்தீர்! புசியின் தொழுதே!**

பொழிப்பு:-

*வல்லபையின் கணவனாகிய விநாயகனின் அருள் பொங்கி வெள்ளம் போல் இவ்வுலகமெல்லாம் நிறைந்து காணப்படுகின்றது. விநாயகனின் குணங்களைப் பாடுபவர்களே' அவன் கருணை வெள்ளத்தை வழிபட்டு அனுபவியுங்கள்.*

## ஆணவம் அகல

**42. மூல மலவா தனைதீர முதல்வா!**
**சீல செழும்செம் சடையன் சிவனார்**
**பால! உயர்தற் பரனே! அருள்தா!**
**கோலம் மிளிரும் குணமார் பொருளே!**

பொழிப்பு:-

*மூல மலமாகிய ஆணவ மலத்தைத் தீர்க்கும் முதல்வனே' அற வடிவான சிவபெருமானுடைய மைந்தனே' உயர்ந்த பரம் பொருளே' அழகொளி வீசும் குணங்களால் நிறைந்த பொருளே' அருள் தருவா யாக!*



நீர்ப்பாசனத்திட்டத்தின் வான் கதவை முன்னாள்
அமைச்சர் காமினி திசாநாயக்காவுடன்
இணைந்து திறந்து வைக்கும் காட்சி



மக்கள் பணியில் மாண்புறு காட்சி



தலவா திட்டத்தில் இருந்து இடமாற்றம் பெற்றபொழுது

## பக்குவம் பெற

43. சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி னமதில் எனைவந் (து) உறுமோ?
அத்தி முகவா! அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!

பொழிப்பு:-

*யானை முகத்தவனே! பெருமை மிக்க தலைவா! பராசக்தியின் மைந்தனே! பக்குவ ஆன்மாக்களிடம் திருவருள் பற்றுவதாகிய தன்மை எந்த நேரத்தில் என்னிடம் வந்து சேருமோ? எனக்குச் சக்திபாதம் வாய்க்கும் நாளை உரைப்பாயாக.*

## துயரம் நீங்க

44. முதல்வா படவே முடியா (து) இனிநோ
இதமே அருளா (து) இருத்தல் எனை? பொற்
பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்
புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!

பொழிப்பு:-

*பொற்பாதங்களை உடையவனே! பராசக்தியின் மைந்தனே! அருள்வாய்! குற்றங்களைத் தீர்ப்பவனே! தலைவா! என்னால் இனித் துன்பப்பட இயலாது. என்ன காரணத்தினால் எனக்கு இன்னமும் அருள் புரியாமல் இருக்கிறாய்?*

## பேரருள் பெற

45. சீலன் துதிக்கைச் சிரனை அனவே
ஞாலத் தினிலே நலம்ஈ வர்எவர்?
கோலச் சிகிவா கனனாம் குகனும்
சாலப் புகழும் தனிமன் அவனே!

பொழிப்பு:-

*யானை முகத்தனைப் போல உலகத்தில் இனி நன்மைகளை அருளுபவர் யார் உள்ளார்கள்? மயில் வாகனனாகிய முருகனாலும் மிகவும் புகழப்படும் ஒப்ற்ற தலைவன் விநாயகனே ஆவான்.*

## கவலைகள் ஒழிய

**46. திண்தோள் சதுரும், திகழ்ஐங் கரமும்,**
**வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்**
**பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்**
**கண்டேன் களித்தேன்; கவலை இலனே!**

பொழிப்பு:

*திண்மையான நான்கு தோள்களையும், ஐந்து கரங்களையும், இரண்டு பக்கங்களிலும் சித்தி புத்தியாகிய தேவிமார் இருவரையும் பெற்ற விநாயகனுடைய அழகிய கோலத்தைக் கண்டேன் ; மகிழ்ந் தேன் ; கவலைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன.*

## ஞானம் பெற

**47. மோன நிலையில் முழுசித் திபெறும்**
**ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!**
**தீனன் எனைஆள் திருமன் கருணைத்**
**தேனம் எனவே திகழ்கின் றவனே!**

பொழிப்பு:-

*அருள்நலம் மிக்க பெரியவனே' அருளாகிய கடல் போன்று திகழ்பவனே' நான் மௌனத்தில் மூழ்கி முழுமையான பரஞானம் பெற அருள்வாய்' அறிவிலியாகிய என்னை ஆள்வாயாக'*

## பிறவி அச்சம் நீங்க

48. அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர் ஐங் கர ! நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யுடனே பிடித்தேன் இதமே!

பொழிப்பு:-

*சிவன் முதலானவர்கள் புகழும் ஐந்துகரத்தை உடையவனே! உன்னுடைய தளிர் போன்ற திருவடிகளை விருப்பத்துடன் பிடித்துக் கொண்டேன். அதனால் பிறவி அச்சத்தை விட்டேன்.*

## சகல சித்திகளும் பெற

49. பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார் ;
முத்தி பெறுவார் ; முதன்மை உறுவார் ;
சித்தி அடைவார்; திடமே! திடமே!

பொழிப்பு:-

*பக்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் யானைமுக விநாயகனின் திருவடிகளில் பணிவார்கள். அதனால் முத்தியைப் பெறுவார்கள், எண் வகைச் சித்திகளையும் பெறுவார். இஃது உறுதி.*

## புகழைப் பெறுவதற்கு

50. தாதா சரணம் ; சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் ; நிகர்இல்
வேதா தரனே சரணம் ; மிளிர்ஐம்
பூதா சரணம் ! புகழ்நாற் புயனே!

பொழிப்பு:-

தலைவனே! வேதங்களின் பொருளாக விளங்கபவனே! ஐம்பூதங் களானவனே! நான்கு தோள்களை உடையவனே! விநாயகனே! உனது தளிர் போன்ற பாதங்களை நான் சரணடைவதற்குத் தந்தருள் வாயாக!

## உலகம் வாழ

51. ஊழி முதல்வன் உயர்வே ழமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!

பொழிப்பு:-

உலகத்திற்கு முதல்வனான யானைமுகன் வாழ்க! அவனுடைய சித்தி, புத்தி தேவிகள் வாழ்க! அழகு நிறை அவனுடைய மலர்ப் பாதங்கள் வாழ்க! அடியார்கள் செல்வங்கள் பலபெற்று வாழ்க!

* தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகிறது.
* துன்பத்தை எதிர்க்கத் துணியாதவர் வாழ்வில் தோல்வியே அடைவர்.
* தாயின் காலடியில் பிள்ளைகளுக்கு சுவர்க்கம் உண்டு..
* பொறுமை என்பது கசப்பு, ஆனால் அதன் கனியே இனிப்பு.

# கச்சியப்ப முனிவர் அருளிய
# காரிய சித்திமாலை

பந்தம் அகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதித்திடுமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரந்திடுமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூரத் தொழுதிடுவோம். 1.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகில் பிறக்கும் விவகாரம்
உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம்! 2.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம் ! 3.

மூர்த்தி ஆகிச் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்ததி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்! 4.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்! 5.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்கும்பர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குண்ண எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்! 6.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான் காம்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாய்
அண்ணல் வன் அக் கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்! 7.

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பிணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்! 8.

* பொறுமையாய் இரு எவரையும் வசப்படுத்திக் கொள்வாய்.
* பகை கொள்ளாதே, நல்லதை நினை, உன் வாழ்வில் நிம்மதி காண்பாய்.
* பணக்காரரை அழிப்பதன் மூலம் ஏழைகளுக்கு உதவ முடியாது.

ஓம்
சரவணபவ



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார் கையில்
வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

உ
சிவமயம்



ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா! நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர வடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயலது அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்

வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.
சரணம் சரணம் சண்முகா சரணம்.

* கோபத்தோடு எழுந்திருப்பவன், துன்பத்தோடு உறங்குவான்.
* தோல்வியைக் கண்டுஅஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகிறது.
* துன்பத்தை எதிர்க்கத் துணியாதவர் வாழ்வில் தோல்வியே அடைவர்.

உ
சிவமயம்



உ
சிவமயம்

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
# சகலகலாவல்லி மாலை



வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே. 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்றும்
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
கட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்
வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே. 10

## காயத்ரீ மந்திரம்

*ஓம்*
*பூர் புவஸ் ஸுவ :*
*தத் ஸவிதுர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி!*
*தியோ யோ நः ப்ரசோதயாத்*



சமூகப் பணிகளில்



முன்னாள் அமைச்சர் மைத்திரிபாலா செனநாயக்கா அவர்களின் மதவாச்சித் தொகுதியில் பணியாற்றி பிரியாவிடை பெறும் காட்சி



பதவியாவில் தனது சக ஊழியர்களோடு - 1973



பிரியாவிடைகளில் மேலும் ஒரு காட்சி

# கப்பல் பாட்டு

வெய்யகன லோங்கி நிற்காரியம் பார்க்க
வெம்மறலி பாஞ்சாலி ஆஞ்சான் பிடிக்க
தூய்யகுண மாரீசன் சுக்கான் பிடிக்க
சொல்லரிய ஈசனும் ஆட்கணக்க னாக
பதுமனையில் இந்திரன் கற்புநிலை பார்க்க
வெற்றிசை வர்ணனும் வெம்பாவே சாம்ப
ஐயமிலா இருதூபி ஓடலி யாக
அலகவதி கலாசுண்ணன் கலாசுண்ண னாக
மயில் மேவும் மலைமேவும் ஆகாசக் கடலில்
வடிவுள்ள பாய்விரித் தோடுதே கப்பல் 1.
(ஏலையெலோ .......)

பஞ்சபுரப் பலகை கப்பலாய்ச் சேர்த்து
பாங்கான ஓங்காரப் பாய்மரம் நாட்டி
நெஞ்சு மனம்புத்தி அகங்கார சித்தம்
மானாபி மானமும் கயிறாகச் சேர்த்து
ஐந்தெழுத்தைக் கட்டிச் சரக்காக ஏற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கான் நிறுத்தி
நெஞ்சுக் கடாட்சத்தால் சீனிப்பாய் தூக்கி
சிவனுடைய திருப்பொருளைச் சிந்தையில் நினைந்து
தஞ்சல் ஆனந்த வெள்ளத்தில் தானே
போகுதடா சர்வரதம் பிரம்ம ரதம். 2.
(ஏலையெலோ...)

களவையுங் கேள்வையுந் தள்ளடா தள்ளு
கருணைக் கடலிலே தள்ளடா கப்பல்
நிர்குணந் தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்தபரி பூரணத்தால் தள்ளடா கப்பல்
திக்குத்திசை யெங்கும் தள்ளடா தள்ளு
திருமந்திரஞ் சொல்லித் தள்ளடா கப்பல்
முக்கண்ணை மூன்றையுந் தள்ளடா தள்ளு
முப்பாலுக் கப்பாலே தள்ளடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலுந் தள்ளடா தள்ளு
பரவெளிக் கப்பாலே போகுதடா கப்பல் 3.
(ஏலையெலோ...)

ஓம்



# வட்டுக்கோட்டை (ஆத்தியடி) உழுத்தொல்லைப்பதி

## சித்தி விநாயகர் வணக்கம்

1. வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலிசெய்கிற்பாம்.

2. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் ~ விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

3. ஆதர வற்றவர்க்கு ஆதாரம் அளித்திடும்
ஆத்தியடி யமர் ஆரா அமுதே ~ அநுதினமும்
ஆனைமுகனேயுனை ஆரா அன்புடனே
அர்ச்சிப்பேன் இருகை கூப்பி.

ஓம்

கணபதி துணை



## *வட்டுக்கோட்டை (ஆத்தியடி) உழுத்தொல்லைப்பதி*

## *சித்தி விநாயகர்*

# *திருவூஞ்சல்*

### காப்பு

திருமருவும் யாழ்ப்பாண மதனிற் சீர்த்தி
திகழு முயர் வட்டு நகரதனில் ஆத்தி
மரு மருவு மலர்பொதும் உழுத்தொல்லை வாழும்
மாசித்தி விநாயகர் மேலூஞ்சல் ஓதக்
கருமருவு முயிரனைத்தும் போற்றி செய்யக்
கருணைபுரி பிரணவத்தின் காட்சியாய
உரு மருவு மொருகோட்டு உம்பல் செய்ய
உபயமலர்த் திருவடிகள் காப்பதாமே. 1.

### ஊஞ்சல் வர்ணனை

சீராருஞ் சதுர்மறையாங் கால்கள் நாட்டித்
திகழுமுயர் ஆகமமாம் விட்டம் பூட்டிப்
பேராரும் அறங்கக் கயிறு மாட்டிப்
பிறங்கு முயர் பிரணவமாம் பலகை கூட்டி
நேராகச் செய்தரும் ஊஞ்சல் மீது
நிறைமலர்சூழ் அரமாதர் வடந் தொட்டாட்ட
ஏராரு மாத்தி செறி உழுத்தொல்லைப்பதியில் வாழும்
எழில் சித்தி விநாயகரே ஆடீரூஞ்சல். 2.

## கொலு வர்ணனை

இந்திரனும் மாருதமும் கவரி வீச
இருநிதிசேர் குபேரனுயர் காளாஞ்சி தாங்கி
சந்திரனும் சூரியனும் கவிகை வாங்கச்
சலநிதியும் பணப்பதியும் அடப்பையேந்தக்
கொந்தவிழும் மலர்மாரி யமரர் தூர்ப்பக்
குன மறலி நிருதி உயர் வட்டஞ் சாய்ப்ப
நந்து தவிழ் உழுத்தொல்லைப் பதியில் வாழும்
நற்சித்தி விநாயகரே யாடீருஞ்சல். 3.

## சம்பிரம வர்ணனை

கருணை செறி முகமாடக் கொம்பு மாடக்
கணபதியின் மணிப்பூணுங் கவின்றே யாட
வருணமிகுந் திருமார்பிற் பூணூலாட
வயங்குமுயர் மகுடமொடு குழையுமாட
அருணமறைப் பொருளான வடிவ மாட
அந்தனிசேர் கமலமாம் பாத மாட
உருநயஞ்சேர் உழுத்தொல்லைப் பதியில்வாழும்
உயர்சித்தி விநாயகரே யாடீருஞ்சல். 4.

## உற்பவ வர்ணனை

வார்மேவு கொங்கையுமை பங்கின் மேய
வள்ளலுயர் வடகயிலைப் பொருப்பின் வாய்ந்த
ஏர்மேவு மணிக்கூடம் தன்னின் மேவ
எழிலாரு மோரெழுத்தே இருகரியாயிசைந்து சேரத்
தார்மேவு மொருகோட்டு முக்கண் நால்வாய்த்
தந்தியென வந்தருளுங் கணேச நாதா
சீர்மேவு முழுத்தொல்லைப் பதியில் வாழும்
திகழ்சித்தி விநாயகரே யாடீருஞ்சல். 5.

## வீர வர்ணனை

சாரதராம் படைசூழ அசலன் தோள்மேற்
சார்ந்து கொம்பாற் கயமுகனைச் சாடிப் பின்னாள்
பாரதமாம் பெருங்கதையை வியாசன் கூறப்
பருமேவு ஏடதனின் மருப்பாற் றீட்டி
நாரதனார் வேண்ட உயர் கந்த வேளின்
நல்லாரல் விரதமதை நவின்ற நாதா
கார் செறியு முழுத்தொல்லைப் பதியில் வாழும்
கணேச சித்த விநாயகரே யாடீரூஞ்சல் 6.

## அடியார் வர்ணனை

அம்பரத்து வானவர்கள் வணங்கிப் போற்ற
அகத்தியனார் கமண்டலத்தினனி நீர்ப் பொன்னி
இம்பரிடைக் கொடியுருவாய்க் கவிழ்த்துப் பின்னர் எழிற்
கும்பமுனி யறியானாய்த் தாக்கச் சென்று
குறிப்பறிந்து தனது நெற்றிகுட்டிப் போற்ற வருள்செய்
உம்பர் புகழு முழுத்தொல்லைப் பதியில் வாழும்
உயர் சித்தி விநாயகரே யாடீரூஞ்சல். 7.

## அருள் வர்ணனை

அன்னையெனத் தமிழ் நீதி யறைந்த அவ்வை
அன்போடு போற்ற உயர் கயிலை சேர்த்தாய்
முன்னவர்க்கு முன்னான முதல்வா முக்கண்
மூத்தபிள்ளை யாகிவந்த மூர்த்தி, வேடர்
நன்னயஞ் சேர் வள்ளி முன்னர் யானையாகி
நயந்து கந்தனுடன் சேர்த்த நம்பா, சீர்த்திச்
சொன்னயஞ்சேர் உழுத்தொல்லைப் பதியில் வாழும்
தூய சித்தி விநாயகரே யாடீரூஞ்சல். 8.

## சிவசுப்பிரமண்ணிய வர்ணனை

திருமருவும் பரசிவனார் விழியிற் தோன்றிச்
செங்கமலச் சரவணத்துச் சிறுவனாகி
மரு மருவு மாரலார் முலைப்பால் மாந்தி
மன்னு நவ வீரருடன் ஆடல் செய்து
பொரு மருவு கரியரிசூர் கொன்று தெய்வப்
போதகத்தை மணந்த உயர்கந்தனோடும்
உரு மருவு முழுத்தொல்லைப் பதியில் வாழும்
உயர்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல். 9.

## நகர் வர்ணனை

செங்குவளை மலர்வாவி மதுவை யுண்டு
செவ்வளி நற்பண் பாடிச் சீலீமுகங்கள்
கங்குமுறும் வயல் வாளை கதிகொண்டேறிக்
காமரத்தின் போதலர்த்தக் கருங்கட் செவ்வாய்
இங்கிதமார் கனன்மாதர் தேனை யுண்டு
இசைபாடித் தந்நிழலோ டூடியாடும்
மங்கலமார் வட்டுநகர் உழுத்தொல்லைப் பதியில் வாழும்
மாசித்தி விநாயகரே யாடீரூஞ்சல். 10.

## வாழி வர்ணனை

ஆவாழி மறைவாழி மறையோர் வாழி
அரசுரொடு வணிகர் வேளாளர் வாழி
கோவினுயர் செங்கோலும் கற்பும் வாழி
குவலயத்து மநுநீதி வாழி ஊஞ்சற்
பாவாழி அணிநீறு மைந்தெழுத்தும் வாழி
பழமை செறி ஆத்தியின்கீழ் அமரு முக்கண்
தேவாழி உழுத்தொல்லைப் பதியும் வாழி
திகழூஞ்சல் படிப்போரும் கேட்போரும் வாழி. 11.

## எச்சரிக்கை

1. சீரார் வளர் வட்டுநகர்த் தேவே கயமுகனே
திகழும் உடுழுத் தொல்லைப் பதிக்கோவே ~ எச்சரிக்கை

2. வீரம் பொலி தாரம் புனை ஏரம்ப நன்மூர்த்தி
சீரம் புலிநேர் கொம்புள சீலா ~ எச்சரிக்கை

## பராக்கு

1. திரு மருவும் வட்டு நகர்ச் செல்வா பராக்கு
திகழ் ஆத்தி மரத்தமருந் தேவே பராக்கு

2. ஏரம்ப மூர்த்தி யெனும் இறைவா பராக்கு
எவ்வுலகும் போற்றி செய்யும் ஈசா பராக்கு

## லாலி

1. வேதியர்கள் புகழ்கின்ற ஆதியுமை பாலா
கோதிலா வுழுத்தொல்லை வாழ் சோதி ஒளிர் வீரா ~ லாலி

2. சித்தியொடு புத்தி புணர் சுத்த மணி மார்பா
முத்தியொடு போக மருள் அத்திமுக வீரா ~ லாலி

மங்களம்

உ
ஓம் முருகா



# வட்டுக்கோட்டை தெவிண்டப்பிராய் பதி முருகன் வணக்கம்

1. தேசம் புகழும் தெவிண்டப்பிராய் தனில் மேவும்
தேவர் சிறைமீட்ட தேசிகனே – செங்கதிர்வேல்
ஏந்தியே யெந்நாளும் என்னிடர்கள் தீர்த்திடவே
வேண்டினேன் நினதருளை வியந்து.

2. கொட்டும் மழைபோலக் கருணை மழை பொழியும்
கொட்டுடை வாழ் முருகன் பதம்பணியத் ~ தொட்டு நிற்கும்
தொல்வினைகள் நீங்கும் பல்பொருளும் பெருகும்
நல் லருளும் கிட்டும் நமக்கு.

3. முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் யான்.

உ

ஓம் முருகா



## வட்டுக்கோட்டை தெவிண்டப்பிராய் பதி முருகப்பெருமான் மீது பாடிய

# திருவூஞ்சல்

### காப்பு

தரு மருவு மிதழிமதி யரவு கங்கை
சடை மருவு பரமசிவன் விழியிற்றோன்றி
உருமருவு மறுமுகமுங் கரமீராறும்
ஒளிமருவு முருவமுமா யுதித்த செவ்வேள்
திருமருவு தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
சிவஞான முருகன்மே லூஞ்சல் பாடக்
கரு மருவு மொருகோட்டு முக்கண் நால்வாய்க்
கற்பகத்தின் பொற்பதங்கள் காப்ப தாமே. 1.

அருமேவு வயிரமணித் தூண்கள் நாட்டி
அணிமேவு செம்பவள விட்டம் பூட்டி
உருமேவு வெண்டாள வடங்கள் மாட்டி
ஒளிமேவு மாணிக்கப் பீடங் கூட்டி
மருமேவு மலர்மாலை வயங்கச் சேர்த்த
மங்கலப் பொன்னூஞ்சன் மிசை மகிழ்ந்தேயேறித்
திருமேவு தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கைவடி வேலவரே யாடீரூஞ்சல். 2.

சந்திரனுஞ் சூரியனுங் குடைகள் தாங்கச்
சலப்பதியும் நிதிபதியும் கவரி வாங்க
இந்திரனும் வந்தரசும் விசிறி வீச
இரணியனும் நெடுமாலும் ஆசி பேச
நந்தி கண வீர குடைவாள் நீட்ட
நன்மை திக ழடியவர்கள் வடந்தொட்டாட்ட
செந்திரு வாழ் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 3.

ஏரியலும் மங்கல யாழ் முனிவன் மீட்ட
எழிலியலும் அரம்பையர்கள் நடனம் நாட்ட
வாரியலும் மணிமுழவம் வாணன் கூட்ட
மலயதவ வரமுனிவன் தாளங் காட்ட
ஆரியலும் தமிழ் மறையு மடியர் பாட
அடியவர்கள் மனமுருகி வடந்தொட்டாட்ட
சீரியலும் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 4.

பூவமரும் முகமாறும் கரமீ ராறும்
பொழியு மருள் விழிநிரையும் புரிநூன் மார்பும்
தூவமரும் சிறுநகையும் துணைப் பொற்றாளும்
தோகையர்கள் பாகமு மாய்த் துயரந் தீர்க்க
மாவமரும் மரகதமா மஞ்ஞை மேலே
வாரி வரு சூரியன் போல் வருமெம்மானே
தேவமரும் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடிவேலவரே யாடீரூஞ்சல். 5.

வாசமலி மஞ்சன நீ ரிளநீர் பன்னீர்
மந்திர நீர் பால் தயிர் நெய் மகிழ்வினாட்டி
நேசமலி நறுங்களபச் சாந்தம் பூசி
நிறமலி பூம் பட்டுடுத்துக் கலன்கள் மாட்டி
மாசறு நற் றூபமொடு தீபங் காட்டி
மன மலியும் பழவடியார் வடந்தொட்டாட்ட
தேசுமலி தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடிவேலவரே யாடீரூஞ்சல். 6.

மங்கல தூரிய மியம்பச் சங்கமேங்க
வாகை தூரிய முழங்க மறைக ளோங்கத்
தூங்க மிகு தமிழ் மறை மந்திரங்க ளோதத்
தூய தமிழ்ப் புகழ் பாட வினைகளோட
எங்கு நறு மணங்கமழ மலர்கள் வீச
எழிலடியார் மனமுருகி வடந்தொட்டாட்டத்
திங்கடவழ் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 7.

மாணிக்க மணிமகுட நிரைக ளாட
மலருமருள் முகமாட விழிகளாட
ஆணிப்பொன் வடமாடத் தொங்க லாட
ஆறிரண்டு தோளாட அயில் வேலாடப்
பாணிக்கட் படையாடச் சதங்கை யாட
பாத தாமரையாட மயிலு மாடச்
சேணெட்டும் புகழுந் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 8.

வல்லியிடப் பாகர்விழி வருதல் பாடி
மருமலர்ப்பூம் பொய்கைதனில் வளர்தல் பாடி
அல்லிமலர்ப் பண்ணவனை யடைத்தல் பாடி
ஆறுமுகங் கொண்டு விளையாடல் பாடி
வல்லசுரக் கிளையோடு மாய்த்தல் பாடி
வழியடியார் மனமுருகி வடந்தொட்டாட்ட
செல்வமலி தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 9.

ஏடவிழ் பூங்குழற் பிடியை மணந் தாயென்றும்
எழில் விழுங் குறமானை யிசைந் தாயென்றும்
காடதனில் வேங்கைமர மானாயென்றும்
கனைகடலுங் குலவரையுங் கடிந்தா யென்றும்
தேடுதவமுனிக் கருளைச் செய்தாயென்றும்
சீரடியார் பாடியணி வடந்தொட்டாட்ட
சேடுதிகழ் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவரே யாடீரூஞ்சல். 10.

ஆவாழி மறைவாழி யறங்கள் வாழி
அந்தணர்கள் வாழி யரன் நாமம் வாழி
பூவாழி புண்ணியவெண் ணீறு வாழி
பூமகளும் நாமகளும் பொலிந்து வாழி
சேவாடுஞ் சிவன் வாழி யுமையாள் வாழி
தெய்வ வள்ளியானை மயில் சேவல் வாழி
தேவாழுந் தெவிண்டப்பிராயாம் பதியில் வைகுஞ்
செங்கை வடி வேலவருஞ் சிறந்து வாழி. 11.

## எச்சரிக்கை

1. திருவார் செந்நெற், றெவிண்டைப் பிராய்த் தேவேயெங்கள் கோவே
முருகார் கொன்றை, முடியோனருள் முருகா ~ எச்சரிக்கை

2. முதுமாமறைப், பொருளாயுள முதல்வா வுமை புதல்வா
சத மாமலர்ச், சுனைப்பூந்தொட்டி, தவழ்ந்தாய் ~ எச்சரிக்கை

3. எள்ளத்தனை பத்தியிலா வென்னை, யுனக்கடிமை கொள்ள
வருமாறு முகங்களுள்ள கோவே – எச்சரிக்கை

4. இருவினைக ளகற்றியெனக் கின்ப சுகம் நல்க
வருமோர் திருப் பேரானந்த வாழ்வே – எச்சரிக்கை

5. எருமைக் கடா மீதிலேறி, யமனார் வரும் போது
மருவார் மயிற் புரவிமிசை வருவா – யெச்சரிக்கை

6. சேவார் விழித் தேவயானை, தேவா மணவாளா
நீலார் மயிலேறி வரு நிமலா – யெச்சரிக்கை

7. கரியகுழற் குறவர்மகள் கணவா வரி மருகா
கயல்விழி யுமையாளருள் குமரா ~ யெச்சரிக்கை

8. பாசஞ் செயுமாதர் நயனமுயக்கிற் கிங்கு நாயேன்
பாசவினைப் பகையைச் சாடும் பரனே ~ யெச்சரிக்கை

## பராக்கு

1. திருமருவு தெவிண்டைப்பிராய்த் தேவே பராக்கு
தேவர் தொழுந் கந்த முருகேசா பராக்கு

2. நீல மயி லேறி வரு நிமலா பராக்கு
நித்த மெனக் கருள் சுரக்கும் நேசா பராக்கு

3. அடிய ரிடர் தீர்த்தருளும் மாதி பராக்கு
அன்னை யுமை யீன்றெடுத்த விமலா பராக்கு

4. கடம்ப நறுங் கண்ணி புனை கந்தா பராக்கு
கன்னி தெய்வ யானை புணர் கணவா பராக்கு

5. தேறினர்கருள் ளுவக்கும் தேனே பராக்கு
தேவர் பெருஞ்சிறை திறந்த சேந்தா பராக்கு

6. குறவர் மடக் கொடி புணருங் குமரா பராக்கு
கும்பமுனி நம்புகுணக் குருவே பராக்கு

7. ஈரமறுஞ் சூரனுடல் எறிந்தாய் பராக்கு
என்ற னுளத் திருளகற்று மிரவி பராக்கு

8. அன்பருள்ளத் தினி திருக்கு மையா பராக்கு
ஆணவத்தின் குறும்பகற்றும் அமலா பராக்கு

## மங்களம்

### பல்லவி

மங்களம் மங்களம் நித்தயசுப மங்களம்

### அநுபல்லவி

செங்கைவடி வேலருக்கும் தேவியுமை பாலருக்கும்
செங்கமலக் காலருக்கும் தேவர்மகிழ் லோலருக்கும் – மங்களம்

### சரணம்

விந்து நாத நாதருக்கும் வேதர்தொழு பாதருக்கும்
சந்தரசு வேதருக்கும் தானவரின் காதகர்க்கும்
தெவிண்டப்பிராய் வாசருக்கும் அன்பர்கிரு பேசருக்கும்
தொடைக்கடம்ப நேசருக்கும் துங்க முருகேசருக்கும்
அன்பர் அடியார்களுக்கும் – மங்களம், மங்களம் நித்திய சுப மங்களம்.

முற்றிற்று.

ஓம் முருகா



# வட்டுக்கோட்டை தெவிண்டப்பிராய் முருகர் ஏசல்

சீராரும் தெவிண்டப்பிராய் செய்ய முருகேசன் மேல்
பாராரும் ஏசலைத்தான் பாடுதற்கு – காராரும்
ஐந்து கரத் தண்ணலெனு மன்ப ரிதயத்துள்
தந்தி முகத் தெந்தை சரண்.

1. தேசமெல்லாம் புகழ் தெவிண்டப்பிராய்ப் பதிவாழும்
முருகன் மேலேசலும் நான்பாட ~ கடம்பமர்
முருகன் மேலேசலும் நான் பாட

2. ஆத்தியடி சேர் ஆதி விநாயகர்
பதமல ரடியிணை காப்பு ~ எழில்
பதமல ரடியிணை காப்பு.

3. முருகவேள் புனத்தினில் வள்ளியை மணந்ததை
தெய்வயானை யறிந்தாளே ~ மங்கை
தெய்வயானை யறிந்தாளே.

4. தெவிண்டப் பிராய்ப்பதி நாதர் தன்னிடம் வருகிற
செய்தி யறிந்தா ளந்த மாது – தெய்வ
யானை யறிந்தா ளப்போது.

5. அன்புடன் முருகேசர் அவ்விடம் வாறாரென்
றடைத்தாளே கதவினை யப்போ – பெண்ணும்
அடைத்தாளே கதவினை யப்போ.

6. திடுக்கென்றே யடைத்திடு கதவினை முருகரும்
தடுக்கென்று தட்டினார் தானே – கதவைத்
தடுக்கென்று தட்டினார் தானே.
(கண்ணே! தெய்வயானை கதவினைத் திறவம்மா)

தெ: மங்கையே செண்பகம் கதவினைத் தட்டியே
திறவென்று சொன்னவர் யாரோ – இந்த
வீதியில் வந்தவர் யாரோ.

முரு: கட்டிக்கரும்பே யெனை நீ யறியாயோ நான் தான்
தெவிண்டப்பிராய்ப் பதிவாழ் முருகேசன் – பெண்ணே
தெவிண்டப்பிராய்ப் பதிவாழ் முருகேசன்.

தெ: எட்டிக்குடிப் பதியினில் வள்ளியை நீர் விட்டு
எப்படிச் சாமத்தில் வந்தீர் – சுவாமி
எப்படிச் சாமத்தில் வந்தீர்.

முரு: பெண்ணே நின் பல்லொளி வெண்ணிலவைத் தர
வந்தேனே நானிந்த வேளை – மானே
வந்தேனே நானித்த வேளை.

தெ: இந்த வேளை யிருயோசனை தூரத்தை
எவ்விதம் நடந்து வந்தீரோ – சுவாமி
எவ்விதம் நடந்து வந்தீரோ.

முரு: மாதரசே யுன்னை மனத்தினில் நினைந்தால்
யோசனை தூரமென்ன தூரம் – இரு
யோசனை தூரமென்ன தூரம்.

தெ: ஒருகண முமை விட்டுப் பிரியாளே யந்த வள்ளி
எப்படி யோடி வந்தீரோ – சுவாமி
எப்படி யோடி வந்தீரோ.

முரு: சுந்தரி யவளை விட்டு உந்தன் செல்வமுகங் காண
ஆசை கொண்டு ஓடி வந்தேனே ~ கண்ணே
ஆசை கொண்டு ஓடி வந்தேனே.

தெ: காணவந்தது லென்ன கையினில் மடியினில்
கையுறை கொண்டு வந்தீரோ ~ சுவாமி
கையுறை கொண்டு வந்தீரோ.

முரு: விரும்பிய பொருளெல்லாம் நானிங்கே தருகிறேன்
விரைவுடனே சொல்லடியம்மா ~ என் பொன்னே
விரைவுடனே சொல்லடியம்மா

தெ: உம்முடைய பொருளொன்றும் எனக்கு நீர் தரவேண்டாம்
எழுந்து நீர் வள்ளியிடம் ஓடும் ~ சுவாமி
எழுந்து நீர் வள்ளியிடம் ஓடும்.

முரு: நேசமில்லாதவள் போலும் நீ பேசுகிறாய்
நித்திரை மயக்கமோ பெண்ணே ~ உனக்கு
நிந்திரை மயக்கமோ பெண்ணே

தெ: நடுச்சாம வேளையில் நீர் வருவீரென்று
விழித்திருப்பாளே வள்ளி போம் போம் ~ சுவாமி
வழிமேல் விழி வைத்திருப்பாளே போம்போம்.

முரு: போமென்று சொல்லுவது புத்தியன்று பெண்ணே
போனாலென்ன கெட்டுப் போகும் ~ பெண்ணே
போனாலென்ன கெட்டுப்போகும்.

தெ: கெட்டுப்போ காதோயிந்தக் கள்ளத் தனங்களெல்லாம்
கேட்பவரார் சொல்லுஞ் சுவாமி ~ உம்மைக்
கேட்பவரார் சொல்லுஞ் சுவாமி.

முரு: கேட்கச்சொல் லியுன்னை யாரிப்போ கேட்கிறார்
கேடு நீ பேசாதே பெண்ணே ~ இப்போ
கேடு நீ பேசாதே பெண்ணே.

தெ: பேசவு மேசவும் என்னாலாகா தந்தச்
சுந்தரி வள்ளிதான் சொல்வாள் ~ அந்தச்
சுந்தரி வள்ளிதான் சொல்வாள்.

முரு: கண்மணியே யென்னைக் கருதி நீ வந்தணைந்தால்
கனவிலும் உனைப் பிரியேனே – பொன்னே
கனவிலு முனைப் பிரியேனே.

தெ: வனிதையாம் வள்ளியை வதுவை செய்திட்டிங்கு
வார்த்தை வளர்க்க வந்தீரோ ~ சுவாமி
வார்த்தை வளர்க்க வந்தீரோ.

முரு: வார்த்தை வளர்த்திட வல்லவ னல்ல நான்
மனதிற் கோபஞ் செய்யாதே ~ உன்
மனதிற் கோபஞ் செய்யாதே.

தெ: இனிமேலும் பேசினா லிருக்குது காரியம்
எழுந்து நீர் போய் விடும் சுவாமி ~ உடனே
எழுந்து நீர் போய் விடும் சுவாமி.

முரு: கண்ணேயுன் மனந்தான் கல்லோ இரும்போ
காலும் வலிக்குதடி கண்ணே ~ நின்று
காலும் வலிக்குதடி கண்ணே.

தெ: காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் திரிவோர்க்கு
கடுக்குமோ கால்களும் இங்கே ~ சுவாமி
கடுக்குமோ கால்களும் இங்கே.

முரு: பொன்னே மணியே யென் பொற்கிளியே யினி
பூங்கையால் கதவினைத் திறப்பாயே ~ கண்ணே
பூங்கையால் கதவினைத் திறப்பாயே.

தெ: கதவைத் திறவென்று கனக்கவே பேசுறீர்
கனதன மென்ன கொண்டு வந்தீர் ~ சுவாமி
கனதன மென்ன கொண்டு வந்தீர்.

முரு: வட்டுமா நகர்ச் செல்வர் காணிக்கையாக வைத்த
வயிரப் பதக்க மொன்று தாறேன் ~ வன்ன மானே
வயிரப் பதக்க மொன்று தாறேன்.

தெ: வயிரப் பதக்கமதை மாயவள் வள்ளியது
மார்பி லிட்டழகு பாரும் – சுவாமி
மார்பி லிட்டழகு பாரும்.

முரு: வைகாசி விசாகத்தில் பக்தர்கள் தந்திட்ட
தரளவெண் மாலைகளு முனக்கே ~ கண்ணே
தரள வெண் மாலைகளு முனக்கே.

தெ: தரள வெண் மாலைகளைத் தையலாம் வள்ளியின்
தனத்திலே போட்டழகு பாரும் ~ சுவாமி
தனத்திலே போட்டழகு பாரும்.

முரு: தெவிண்டப்பிராய் பூசகர் எழும்பி வருமுன்னே
திருக்காப்புச் செய்திடக் கதவைத்திறவடி – கண்ணே
திருக்காப்புச் செய்திடக் கதவைத்திறவடி பொன்னே.

தெ: இப்படிச் சொல்வி என்னை ஏமாற்றிடத்
தெவிண்டப்பிராய்ப் பதியிடந்தராது
தெவிண்டப் பிராய்ப் பதியிடந்தராது.

முரு: ஓமெனு பிரணவத் தைங்கர மைத்துனன்
உன் வாயில் நிற்கிறார் பாராய் ~ பெண்ணே
உன் வாயில் நிற்கிறார் பாராய்.

தெ: கதவினைத் திறந்திட நீர் செய்யுஞ் சூழ்ச்சியோ
கண்ணினா லவரை நான் பாரேன் ~ சுவாமி
கண்ணினா லவரை நான் பாரேன்.

முரு: இக்கணம் கதவினைத் திறப்பீரே யாமாகில்
இன்பமுடன் அணைவேனே - பொன்னேயும்மை
இன்பமுடன் அணைவேனே.

(முடிவில் பொது)

1. காங்கேயன் ஐந்தெழுத்தைக் கருத்துடன் செப்பவே
கதவு தான் திறந்தது தானே - உடன்
கதவு தான் திறந்தது தானே.

2. கதவு தான் திறந்திடப் பூமழை சொரிந்தது
தெய்வ யானையும் பணிந்தாளே - அவளும்
முருகனைத் தழுவிக் கொண்டாளே.

3. தெய்வக் குஞ்சரி மாதும் தேன்மொழி வள்ளியும்
சேர்ந்து மகிழ்ந் தனரே - ஒன்றாய்ச்
சேர்ந்து மகிழ்ந்தனரே.

## தேவாரம்

பண்ணினேர் மொழியாள் உமைப் பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக் காடரோ
கண்ணினால் உமைக் கானக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே.


## வாழி விருத்தம்

வையக மாதும்வாழி வான்முகில் பொழிந்து வாழி
வையக மனைத்துங் காக்கும் மன்னரோ டானும் வாழி
வையக மதனில் நீறும் நிகரில் ஆறெழுத்தும் வாழி
வையகம் போற்றும் முருகரேசலஞ் சிறந்து வாழி

திருச்சிற்றம்பலம்

குறிப்பு : *இப்பாடல்களை வழங்கியவர் - வே. கண்ணபிரான்*

# யோகர் சுவாமிகள்



"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாமறியோம்"
"முழுவதும் உண்மை "
" சும்மாயிரு"

# கொடிக்கவி

## சந்தானகுரவர் உமாபதி சிவாச்சாரியார் அருளியது

### விருத்தம்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள் அடராது உள்ளுயிர்குமிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும், திரிமலத்தை
குளிக்கு முயிர், அருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

பொருளாம் பொருள்ஏது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது – அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வரிய தன்மையினை நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெரு எழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமல் காட்டக் கொடி.

### திருவாசகம் (திருதச அங்கம்)

சோலை பசுங்கிளியே தூநீர் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய் சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறும் கொடி.

# நவசந்திப் பண்கள்

*ஆலயங்களில் நடந்துவரும் வருடாந்த உற்சவ காலங்களில் கொடியேற்ற விழாவிலன்றும், கொடியிறக்கும் விழாவினன்றும் நவசந்திப் பண்கள் ஓதுவது வழமை.*

**01. கொடித் தம்பத்தருகில்**

பண்: தக்கராகம்

பாடல்: மடையில் வாளை பாய; துணிவளர் திங்கள்

பண்: இந்தளம்

பாடல்: பித்தாபிறைசூடி; சடையா யெனுமால்

**02. பிரம்மசந்தி**

பண்: மேகராகக் குறிஞ்சி

பாடல்: நீறு சேர்வதோர், புலன் ஐந்தும்

**03. இந்திரசந்தி**

பண்: காந்தாரம்

பாடல்: மந்திரமாவது நீறு, சுண்ணவெண். மாதர்ப் பிறை

பண்: காந்தார பஞ்சமம்

பாடல்: சொற்றுணை வேதியன், இடரினும் தளரினும்

**04. அக்கினிசந்தி**

பண்: கொல்லி

பாடல்: சலம்பூவொடு. மண்ணில் நல்ல வண்ணம். மானினேர்விழி

**05. இயமசந்தி**

பண்: கௌசிகம்

பாடல்: காதலாகி, வீடலால வாயிலாய். வாழ்க அந்தணர்

**06. நிருதிசந்தி**

பண்: நட்டபாடை

பாடல்: தோடுடைய செவியன், நத்தார் படை, உண்ணாமுலை

**07. வருணசந்தி**

பண்: சீகாமரம்

பாடல்: கண்காட்டும் நுதலானும், மட்டிட்ட புன்னையம், கள்ளார்ந்த

**08. வாயுசந்தி**

பண்: தக்கேசி

பாடல்: திங்கள் தங்கிய சடையுடையானை, அந்தணாளனுன் அடைக்கலம் புகுத, பூவார் மலர்கொண்டு

**09. குபேரசந்தி**

பண்: தக்கராகம்

பாடல்: மடையில் வாளை பாய, துணிவளர் திங்கள்

**10. ஈசானசந்தி**

பண்: சாளாபாணி (நடைமுறையில் இல்லை) சாதாரி பண் படிக்கலாம்

பாடல்: தலையே நீ வணங்காய், எந்தமது

தொகுப்பு :
**வே. கண்ணபிரான்,**
**வட்டுக்கோட்டை.**

* *பெரியோரை மதித்து நட, அது உனக்கு உயர்வு தரும்.*

* *பேசாத மனிதனிடமும், குரைக்காத நாயிடமும் எச்சரிக்கையாய் இரு.*

# வாழ்வின் வளம்

ஈழநாட்டின் சீர்கள் மலிந்த வட்டுக்கோட்டையில் கதிரேசு சுந்தரம்மா தம்பதியரின் புதல்வனாக குமராசாமி அவர்கள் 1924 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் பிறந்தார்.

இவருக்கு பெண் சகோதரிகள் உடன் பிறப்புக்கள் ஆவர். அமரர் இராசம்மா செல்லையா, அமரர் திருமதி செல்வரத்தினம் நடராஜா, அமரர் திருமதி கதிரிதம்பி ஆகியோர் இவரின் சகோதரிகள் ஆவர்.

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்கல்வியை முடித்து கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து தொழில்சார் கல்வியைக் கற்றுக்கொண்டார்.

பின் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்பவியலாளராகச் சேர்ந்து பொறியியலாளராகப் பதவி உயர்வு பெற்றார்.


அவர் தன் 27 ஆவது வயதில் சுப்பிரமணியம் தங்கரத்தினம் தம்பதிகளின் புதல்வி தவமணியை 1951 ஆம் ஆண்டு விவாகம் செய்தார்.

இலங்கையின் பல பாகங்களிலும் பொறியியலாளராக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கடமையாற்றி அமைச்சர்களதும் உயரதிகாரிகளதும் பாராட்டைப் பெற்றார்.

தன்னோடு பணியாற்றியவர்களோடு அன்போடும் பண்போடும் அணுகி அவர்களின் முழுவேலைத்திறனையும் பெற்றார்.

42 ஆண்டு கால அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் விவசாயத்திலும் சமயப்பணியிலும் ஈடுபட்டார்.

இவரைப் பாராட்டி கிளிநொச்சி வாழ்மக்கள் தங்கப்பதக்கம் சூட்டியும், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் **"ஊருக்கு உழைத்த உத்தமர்"** என்ற விருதினையும் வழங்கிக் கௌரவித்தனர்.




மகாகொண்டா திட்டத்தில் பணியாற்றிய காலை



1971 இல் மின்னேரியாவில் உள்ள
தனது அலுவலகத்தில்



1959 ஆம் ஆண்டு வவுனிக்குளம் திட்டத்தில்
இருந்து இடமாற்றம் பெற்ற பொழுது
சக ஊழியரின் பிரியாவிடையில்



1948 இல் எலகரா திட்டத்தில்
பணியாற்றிய பொழுது

தன் மருமக்கள், பெறாமக்கள் ஆகியோரின் கல்வி வளர்ச்சியில் ஊக்கம்காட்டி உயர்நிலையடையச் செய்தார்.

பேரப்பிள்ளைகளிடமும் மிகவும் பாசமாக இருந்தார்.

2002 ஆம் ஆண்டு தை மாதம் 6 ஆம் திகதி இவரது மனைவி இறைபதம் எய்தினார்.

உடல் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தாலும், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளிடம் தொடர்ந்தும் அதிக அக்கறை காட்டினார்.

இவர் வீட்டில் இருந்தவாறே தனது உற்றார், உறவினர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி வந்தார்.

இவர் 23.12.2005 இல் இவ்வுலகவாழ்வை நீத்து இறைபதம் அடைந்தார்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நற்றாற்றில் நின்ற துணை.**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

*- திருக்குறள்*

# Service Record of Late MR. K. Kumarasamy

## (Irrigation Engineer)

| | | |
|---|---|---|
| 01.10.1942 to 01.10.1943 | - | I. L. Training class, Colombo. |
| 01.10.1943 to 02.10.1944 | - | I. L. Galle & Suburbs |
| 02.10.1944 to 07.02.1945 | - | I. L. Hydraulic Laboratory |
| 07.02.1945 to 01.05.1947 | - | I. L. & T. A. Mutur, Verugal |
| 01.05.1947 to 01.02.1948 | - | T. A. Colombo, S. D. |
| 01.02.1948 to 02.01.1953 | - | T. A. Bakamuna, Diyabeduma (Elahara Scheme). |
| 02.01.1953 to 15.06.1956 | - | T. A. Kilinochchi (R. B. Channel) |
| 15.06.1956 to 30.06.1958 | - | T. A. Talawa |
| 01.07.1958 to 15.07.1959 | - | T. A. Vavunikulam |
| 15.07.1959 to 17.10.1962 | - | T. A. Thanimurippu |
| 18.10.1962 to 15.02.1963 | - | T. A. Boralanda. |
| 15.02.1963 to 31.08.1967 | - | T. A Mahakanderawa. |
| 31.08.1967 to 13.09.1967 | - | I. E. Mahakanderawa scheme. |
| 14.09.1967 to 31.01.1971 | - | I. E Minneriya |
| 01.02.1971 to 22.01.1973 | - | E. E Minneriya Division |
| 22.02.1973 to 01.03.1978 | - | E. E Padaviya |
| 01.03.1978 to 23.01.1979 | - | I. E. Padariya |
| 24.01.1979 to 24.05.1984 | - | I. E. Kilinochchi |

# பெருவெள்ள அழிவிலிருந்து கிளிநொச்சியைக் காத்த மேலோன்

*வடபகுதியை பொன்விளையும் பூமியாக, செல்வம் கொழிக்கும் பூமியாக திகழவைப்பது கிளிநொச்சி பிரதேசமாகும். கிளிநொச்சிப் பிரதேசத்தில், 80 வருடங்களுக்குப் பிறகு கடந்த 26.11.1981 தொடக்கம் 1 நாளில் மட்டும் 22 அங்குல மழை பெய்துள்ளது. இரவு பகலாக மூன்று நாட்கள் தொடர்ந்து மழை பெய்துள்ளது. இதன் காரணமாக கிளிநொச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க்காணும் குளங்கள் உடைத்துப் பெருக்கெடுத்தன.*

**புதுமுறிப்புக்குளம், ஐயங்கங்குளம், கந்தன்குளம், பழைய முறுகண்டிக்குளம், சிவநகர்குளம், கோரக்கண் கட்டுக்குளம், உடையார் கட்டுக்குளம், இடைக்காட்டுகுளம், அம்பலப் பெருமாள்குளம்.**

*இதைவிட ஆறு சிறிய குளங்களும் உடைப்பு எடுத்து, கிளிநொச்சி பிரதேசமே வெள்ளக்காடாகக் காட்சி அளித்தது. இந்நிலமையில் வடபகுதியின் முதுகெலும்பாகவும், செல்வம் கொழிக்கும் நாடாகவும் திகழ வைக்கும் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயரம் 34 அடியாக இருந்தபோதும் குளம் நிரம்பி, 34 அடியைத் தாண்டி 36 அடியாகி, குளம் உடைக்கும், நிலைமைக்கு வந்தது. வாண் பாயும் கதவுகள் திறந்தும் குளத்தை கட்டுப்படுத்த முடியாத நிலைமை உருவாகியது. கிளிநொச்சி மக்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்தித்த வண்ணம் இருந்தனர்.*

*இந்நிலைமையில் கிளிநொச்சி நீர்ப்பாசன அதிபர் திரு. க. குமார சுவாமி அவர்களின் சேவையை எவரும் மறக்க முடியாது. இரவு பகலாக மூன்று நாட்களாக, இரணைமடுக் குளத்தில் தங்கி இருந்து நிமிடத்துக்கு நிமிடம், நீர் பெருக்கு எடுக்க குளத்தின் வாண் பாயும் கதவுகளை திறந்து கிளிநொச்சி பிரதேசத்தை காப்பாற்றித் தந்தார்.*

எனவே மேற்படி நீர்ப்பாசன அதிபருக்கும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், பொறியியலாளர்களுக்கும் ஏனைய நீர்ப்பாசன பணியாளர்களுக்கும் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகளின் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும், எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்து மேன்மேலும் இவர்களின் சேவையை இந்நாடுபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| இல. 5 புதுமுறிப்பு, | சு. கனகசபாபதி, |
| உருத்திரபுரம், | காரியதரிசி, |
| 04.12.1981 | புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் |

## பொன் மொழிகள்

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - | மூப்பு , இளமை |
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம் , புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| பிரிக்க முடியாதது இரண்டு | - | பந்தம், பாசம் |
| அழிவைத்தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் மூத்த ஆலோசகரும், மணிவிழா சிறப்பு விருது பெற்றவரும், இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரும், கிளிநொச்சி மாவட்டத்தில் அர்ப்ப ணிப்புடன் சேவையாற்றி நன்மதிப்புச் பெற்றவருமான அமரர் க. குமாரசாமி அவர்களுக்கு எமது சங்கத்தின் கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**" செந்தமிழோடுயர் சைவமும் வாழ ஜெகமிதில் உழைத்திடுவோம். "**

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

# கனகபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகம்
# Kanagapuram Youth Front Association

கௌரவ க. குமாரசாமி அவர்கட்கு,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சி.

## சேவை நிலைக்கட்டும்

கனம் ஐயா,

*இம்மாவட்டத்தில் தாங்கள் தொடர்ச்சியாக ஆற்றிவரும் இரவு பகல் பாராத சேவைக்காகவும் அண்மையில் பெய்த மழை காரணமாக உடைப்பெடுத்த இரணைமடுக்குள அணைக்கட்டை தங்களது உறுதி யான இறுதி நடவடிக்கை மூலம் தடுத்து இப்பகுதி மக்களுக்கு உயிர்ப் பிச்சையளித்த தங்கள் சேவைக்காகவும் கனகபுரத்திலமைந்துள்ள நான்கு குளங்களும் நிரம்பி உடைப்பெடுக்கவிருந்த வேளையில் ,*

*இரவு பகல் பாராது கருமமே கண்ணாயிருந்து ஆற்றிவரும் தங்கள் பணிக்காகவும் கிளிநொச்சி மக்கள் சார்பாகவும், கனகபுரம் இளைஞர் முன்னற்றக்கழகம் சார்பாகவும் எமது அன்பான நன்றியறி தலைத் தெரிவிப்பதோடு ,*

*தங்களின் சேவை எமது பகுதிக்கு எக்காலமும் கிட்டவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் நீடுகாலம் வாழ்கவெனவும் வாழ்த்து கின்றோம்.*

*நன்றி.*

*இங்ஙனம்*

*செயலாளர்.*

31-03-1984

# முரசுமோட்டை இளம் விவசாயிகள் ஒன்றியம்
# Murasumoodai Young Farmers Union

திரு. K. குமாரசாமி அவர்கள்
பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர்,
கிளிநொச்சி.

ஐயா,

## வெள்ளப் பெருக்கில் விவேக சேவைக்கு
## உள்ளம் உதிர்க்கும் பெரு நன்றி.

அண்மையில் கிளிநொச்சி அபாயத்தோடு எதிர்கொண்ட பிரச்சனைக்கு விவேகத்தோடு அஞ்சும் மக்களுக்கு அபயமளிக்க கண்துஞ்சாது நீவிர் நிலைநாட்டிய சேவைக்கு எம் ஒன்றியம் சார்பான நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

உடைக்கும் நிலைக்கு உள்ளாயிருந்த இரணைமடுக் குளத்தை நீர் நிறைத்து அடைத்து அபாயத்தையும் தடுத்த நும் ஆற்றலுக்கு தலைவணங்குகின்றோம்.

அரச சேவைத்தளங்கள் அங்குள்ள உத்தியோகஸ்தர்களின் பொழுதுபோக்கு களியாட்ட களங்கள் என்றவாறு பொதுக் கருத்தை அரச கந்தோர்கள் அனைத்து மக்களிடமும் ஏற்படுத்தியிருக்கின்ற இக்காலக் கட்டத்தில் நீவிர் உத்தியோகஸ்தருள் ஒரு உதாரண புருஷராக திகழ்வது ஆச்சரியம் கலந்த ஆனந்தமளிக்கிறது. தொடர்க நும் சேவை. நன்றி.

நம்கையில் நம் கஞ்சி
நாம் வாழோம் பிறர்க்கஞ்சி

*உறங்காத நன்றி உணர்வுடன்*

முரசுமோட்டை
09 - 12 - 1981

*ஒன்றியம் சார்பாக*

# பரந்தன் , பெரிய பரந்தன், குமாரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் பரந்தன்

திரு. க. குமாரசாமி அவர்கள்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சி.

ஐயா

*மேற்படி சங்கம் கிளிநொச்சி பகுதி விவசாயிகளிற்கு தாங்கள் செய்த சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதுடன் கௌரவ விருந்தும் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே மார்ச் மாதம் முதல் வாரத்தில் தங்களிற்கு வசதியான ஒரு திகதியை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

இங்ஙனம்
க. சு. ஞானப்பிரகாசம்
செயலாளர்

01-02-1982

* *உங்களை நீங்களே மதிப்பது ஆணவம். பிறர் உங்களை மதிப்பதே பெருமை.*
* *உண்மைக்குப் பயப்படுகிறவன் ஒருவருக்கும் பயப்பட மாட்டான்.*

## தேசிய அரசுப் பேரவை
## National State Assembly

***Dear Mr. Kumarasamy,***

***Date:***
***21st February 1979***

Thank you for your letter informing me of your transfer to kilinochchi though it is a big loss to my electorate and in particular Padaviya. I am glad you are going nearer home, which is what you wanted nearly theree years ago.

I am sure you will give where ever you are the same dedicated and selfless devotion to work, that you gave to other areas in this country where you have work in the past, and especially mine in the last Few years. The greatest tribute to you Personally is that my people treated you in time of crisis as in the communal stress of 1977 and that is mainly because of the excellent relations you yourself maintaned with these poor villages.

I thank you for all that you did loyally and genuinely in carrying out my requests for developing my area - nothing

was impossible or too difficult especially where improvement and development were concerned. I know that no villager was turned away by you at any time however impossible the request was.

I am most grateful and appreciate all that you did, not only for me personally as a member for Madawachiya but for the country in your entire career as Engineer.

My wife wishes me to add that she would like to thank you for your personal kindness and courtsey to her at all times.

With kind regards.

Yours sincerely,



Maithripala Senanayake.

To know oneself, one should assert onself

*- Albert Camus, Notebooks*

*Be always sure you' re right, then go ahead.*
*- Davy Crockett.*

# இரணைமடுக் குளமும் எந்திரி குமாரசாமியும்

எண்பதுகளில் எனது முதுமாணிப் பட்டப்படிப்பிற்காகக் கிளிநொச்சிப் பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டினை ஆய்வுக்கு எடுத்திருந்தேன். எண்பத்திநான்குகளிலிருந்து அப்பிரதேச உதவி அரசாங்க அதிபராகவும், பின்னர் மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றும் வாய்ப்பும் கிடைத்திருந்தது.

எண்பத்திநான்குகளில் கிளிநொச்சிப் பிரதேசம் வெள்ளக் காடாகியது. இப்பிரதேசத்தின் வாழ்வும் வளமுமாக விளங்கும் இரணைமடுக்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலைக்குட்பட்டது. அவ்வேளை இரு செயற்பாடுகள் என் மனதை நெகிழச்செய்தன: பெருமைப்பட வைத்தன.

அறுபது வயதுகளை எட்டிக்கொண்டிருந்த நீர்ப்பாசன எந்திரி திரு. குமாரசாமி என்ற பெரியோனின் கடமையுணர்வும், கண்ணியமும், பெருந்தன்மையும் என்னை நெகிழ வைத்தது.

பலருக்கு எந்திரித் தொழிலால் பெருமை, ஆனால், குமார சாமிப் பெரியவரால், எந்திரித் தொழிலுக்குப் பெருமை, குளம் உடைக்கப் போகின்றது என்று கேள்விப்பட்டால், தமது சொந்தப் பிரச் சினைகளை எல்லாம் ஒரு புறத்தில் ஒதுக்கிவிட்டு, ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி, இரவு பகலாக மண் மூடைகளை அடுக்கி அணையைக் காக்கத் திரண்ட கிளிநொச்சி மக்களது உழைப்பு என்னைப் பெருமைப் படவைத்தது.

அந்த நாள்களில் வட்டக்கச்சியைச் சேர்ந்த பெண்மணிகள், கடகங்களில் பிட்டு நிரப்பி எடுத்து வந்து, கரங்களால் அள்ளியள்ளி அணைக்கட்டில் வேலையிலீடுபட்டிருந்த மக்களுக்கு வழங்கினார்கள். அதிகாரியாகக் குளக்கட்டில் நின்றிருந்த எனக்கு ஒரு அம்மையார் வழங்கிய ஒருபிடி பிட்டு இன்னும் வாயில் இனிக்கிறது. செம்மனச் செல்விகள் வாழ்கிறார்கள்!

* * * * * * * * *

மலைத்தொடராக நீண்டு கிடந்த இரணைமடுக் குளக் கட்டில் குடை ஒன்றினைத் தலைக்கு பிடித்தபடி மெலிந்த ஓர் உருவம் நின்றிருந்தது. அரைக்காற் சட்டையும், புஷ்சேர்ட்டும், கால்களில் செருகியிருந்த றப்பர் சிலிப்பரும் அந்த உருவத்தின் எளிமைக்குச் சான்று கூறின. பார்வைக்குச் செக்கச் சிவந்த நிறம், புன்முறுவல் படர்ந்த உதடுகள், வயது ஐம்பத்தொன்பது மதிக்கலாம்.

தூரத்தில் வரும்போதே தம்பிராசா, குளக்கட்டில் எஞ்சினியர் குமாரசாமி நிற்பதையும் அவர் விழிகள் தென்புறமாக நீண்டு பரந்து கிடந்த இரணைமடுக் குளத்தின் நீர்ப்பரப்பில் கவிந்து கிடப்பதையும் அவதானித்தான். மழையையும் பொருட்படுத்தாது குளக் கட்டில் ஏறி அலைந்து அணையின் பலத்தையும் பலவீனத்தையும் அயராது அளவிட்டு வரும் அவரின் கடமையுணர்விற்கு அவன் தலை வணங்கினான்.

"வடபகுதி மக்களின் வரப்பிரசாதம் இரணைமடுக்குளம். கிளிநொச்சி மக்களின் வாழ்வும் வளமும் இந்தக் குளத்தில் தான் தங்கியிருக்கிறது." என்பார் குமாரசாமி.

* * * * * * * * *

அவர் உடைகள் தெப்பமாக நனைந்திருந்தன. குளிரில் அவர் உடல் வெடவெடப்பதாக அவனுக்குப்பட்டது.

"இப்படி மழையுக்க நீங்கள் குளக்கட்டிற்கு வரவேண்டுமா? ஆக்களை அனுப்பினால் பார்த்துச் சொல்வார்களே? இந்த வயதில ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறியள், சேர்?"

குமாரசாமி அவனை ஆழமாகப் பார்த்துவிட்டு மெதுவாகச் சிரித்துக் கொண்டார். "இந்த வயதில இப்படிச் சொல்லக் கூடாது, தம்பிராசா."

அவன் எதுவும் பேசாது மௌனமாக நின்றிருந்தான், அவர் தொடர்ந்தார்: " நீ என் ஒருவனுக்காகக் கவலைப்படுகிறாய். நான் இந்தக் குளத்தை நம்பி இங்க குடியேறியிருக்கும் அறுபதினாயிரம்

மக்களுக்காகக் கவலைப்படுகிறன். யாழ்ப்பாணக் குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தம் சுற்றம் உற்றம் என்பனவற்றை விட்டு நம்பிக் கையான ஒரு எதிர்காலத்தை எதிர்பார்த்து இங்கு வந்து காடழித்து கழனிகளாக்கி வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு, இந்தக் குளத்தின் சேமம்தான் வாழ்வின் வளம்..."

அவன் அவரை வியப்புடன் பார்த்தான்.

"மழை பெய்ததும் குளம் நிரம்பும், வேளாண்மை செய்யலாம் என அவர்கள் நினைத்து மகிழ்கிறார்கள். குளம் நிரம்பட்டும் நீரைக் கொடுப்போம் என உத்தியோகத்தர்கள் நினைக்கிறார்கள். என்னால் அப்படி நினைக்க முடியவில்லை. மழை பெய்ததும் குளம் நிரம்பும் என்ற நம்பிக்கைதரும் எண்ணத்தோடு, இன்னொரு உணர்வும் ஏற்படு கிறது. மழை கூடி அணையில் கசிவு ஏற்பட்டு ஏதாவது நிகழ்ந்து விட்டால்....? என எண்ணுகிறன். இந்த பிரமாண்டமான குளத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு பணம்... எவ்வளவு மனித முயற்சி... எவ்வளவு காலம் செலவாகியிருக்கும் தெரியுமா? எமது மூதாதையர்கள் கட்டித்தந்த இந்தக் குளத்தைப் பக்குவமாகப் பேணிப் பாதுகாத்துப் பயன்பெறுவதோடு, எதிர்காலச் சந்ததிக்கும் பயன்பெறக் கொடுத்து விட்டுப் போகவேண்டும்...."

செங்கை ஆழியான்

*மேலதிக அரசாங்க அதிபர் (காணி)*
*கச்சேரி, கிளிநொச்சி,*
*10. 12. 1989*

நன்றி: ***மழையில் நனைந்து***
***வெய்யிலில் காய்ந்து....***

- * உதவி செய்பவனைத் தடுக்காதே, தடுத்தால் பிச்சை எடுத்து அலைவாய்
- * கல்வியின் நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதே ஆகும்.

## SKANDAPURAM RURAL DEVELOPMENT SOCIETY

*Skandapuram*
*18.XII.81*

*K. Kumarasamy Esqr.,*
*Irrigation Engineer,*
*Kilinochchi.*

*Dear Sir,*

### Patriotism


Patriotism is a quality which is inate but not acquired. Dictates of patriotism are manifold and we may not be intellectually competent to comment or describe it as should be. Lord Nelson Admiral of the British navy told his men at the fearful battle of the Trafalgar, "England expects every man to do his duty" and ingrained the sense of patriotism into the minds of the Englishmen.

Patriotism is a very very rare quality here among the Sri Lankans, perhaps because we were stripped of it by our one - time colonial masters.

We wish to register in your mind and express our (Colonists) gratitude, belated though for the very big service you were pleased to manifest in the matter of the recent rains which threatened the existence of the colonist around the Iranamadu Tank should the bunds have given way to the onslaught by the



பள்ளி வாழ்க்கையில் பூப்பந்தாட்ட வீரனாக
அவரது அணியுடன்



1947 ஆம் ஆண்டு மூதூரில் பணியாற்றிய
கால நினைவுகள்



எழுபத்தெட்டாம் அகவையில்
அமரர் துணைவியாருடன்

fast moving rain water. We thank you in the name of patriotism and beseech of the Lord that he vests you with longer life and health and enable you to render similar service even in the future.

The Akkarayan Kulam Tank is spilling again. We are sure we need not request you to look after our interest similarly.

Yours faithfully

Secretary

President

Who has self - confidence will lead the rest.

- Horace,
*Epistles*

They can do all because they think they can - Virgil,
*Aeneid*

If I am not for myself, who is for me?

- Hillel " The Elder, " quoted in
C. Taylor, ed.,
- *Sayings of the jewish Fathers*

*நீர்ப்பாசன இலாகா,*
*கிளிநொச்சி,*
*1982. 02. 03.*

*கௌரவ செயலாளர்,*
*கிராம அபிவிருத்திச் சங்கம்*
*பரந்தன்.*

ஐயா!

*தங்களது 01.02.1982 ந் திகதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். தாங்கள் எனது சேவையைப் பாராட்டிக் கௌர வித்து விருந்து கொடுக்கத் தீர்மானித்தற்கு நன்றி தெரிவிக் கிறேன்.*

*அரசாங்க ஊழியன் என்ற முறையில் நான் எனது கடமையைத்தான் செய்துள்ளேன். ஆகவே தங்களது பாராட் டுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குக் கிடைத்த பெருமையாக நான் எடுத்துக் கொள்கிறேன்.*


*அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தங்கள் சேவைக் காகத் தனிப்பட்ட முறையில் பாராட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது முறையல்ல என நான் கருதுவதால் தங்களது நிகழ்ச்சிக்குச் சமூகம் கொடுக்க முடியாமையை வருத்தத் துடன் தெரிவிக்கிறேன்.*

*நன்றி*

*தங்களது சேவையிலுள்ள,*
*க. குமாரசுவாமி,*

*நீர்ப்பாசனப் பொறியியலாளர்,*
*கிளிநொச்சி.*

# நன்றி



எமது குடும்பக் குலவிளக்கு வட்டுவூரின் மூத்த பிரஜை
இறையடி சேர்ந்த காலை ஓடோடி வந்து உதவிய
அன்பு நெஞ்சங்கட்கும், எமது துயரில் பல
வழிகளாலும் பங்குகொண்ட மேன்மை
மிகு மக்களுக்கும் , இன்று நடைபெறும்
சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனை
நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த உங்களுக்கும்,
அமரர் வாழ்ந்த காலை அவரது
சேவையையும் சிறப்பையும்
கௌரவித்த அன்பர்களுக்கும் எமது நன்றி.

திரு. திருமதி வே. கண்ணபிரான்,
இல. 1, கனகரத்தினம் வீதி,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.
22.01.2006

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

பாரதி பதிப்பகம் 430 காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.